**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 502 /2017** |
| **Deposition of witness for** | : | **PW : 3** |
| **Name** | : | **திரு. ரவிசங்கர்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **14.11.2024**

1, 6 வது எதிரி ஆஜர். 2 முதல் 5 வரையிலான எதிரிகளுக்கு ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

நான் மதுரை அண்ணாநகரில் குடியிருந்து வருகிறேன். மதுரை மாநகராட்சியில் ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். எனது ஓட்டுநர் உரிமம் அடையாள எண்.TN59-20040042479 ஆகும். நீதிமன்றத்தில் ஆஜர் ஆகியுள்ள 6 வது எதிரியை எனக்குத் தெரியாது. 1 வது எதிரி என் மனைவியின் உறவினர். 2, 3 எதிரிகள் என் மனைவியின் உறவினர்கள். 4, 5 எதிரிகளை எனக்குத் தெரியாது. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் சித்ரா எனது உறவிக்காரரா என்று கேட்டார்கள். நான் ஆமாம் என்று சொன்னேே. எந்த விசயமும் நான் பார்க்கவும் இல்லை, கேள்விப்படவும் இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு**

**தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

போலிசார் விசாரணையின் போது, கடந்த 20.06.2016ம் தேதி நானும் சீனிவாசனும் பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது அவர் வேலை செய்து வந்து கோல்டன் ஹோமில் இருப்பவர்கள் ஒரு பச்சிளம் குழந்தையை மதுரை குலமங்கலம் ரோட்டில் உள்ள மருத்துவமனையில் இருந்து கொண்டு வந்து, விற்க மறைத்து வைத்திருப்பதாக சொன்னதாகவும், நான் விசாரித்த போது, உண்மையென தெரிந்தது என்றும், எனக்குத் தெரிந்த சமூக பாதுகாப்பு துணை இயக்குநருக்கு தகவல் சொன்னேன் என்றும், அவர்கள் சொன்னது போல் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்திற்கு போன் மூலம் தகவல் தெரிவித்தேன் என்றும், அதன் அடிப்படையில் சீனிவாசன் 20.06.2016ம் தேதி புகார் கொடுத்தார் என்றும், குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தை சேர்ந்த அதிகாரிகள் கூடல்புதூர் காவல்நிலையத்தில் புகார் அளித்து வழக்கு பதிவு செய்து குழந்தையை மீட்க நடவடிக்கை மேற்கொண்டதாகவும், குழந்தையை மீட்கும் வரை நான் உதவியாக இருந்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என் மனைவிக்கு உறவினர்கள் என்பதால் அவர்களை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்றவேண்டும என்பதற்காக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,

மகளிர் நீதிமன்றம்,மதுரை